# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 May 2016 Issue - 5


ஆசிரியர் உரை

## ...ஒன்றையுங் குறித்து கவலைப்படேன்

ஒட்டுமொத்த மானிடர் எல்லோர் மனதிலும் நீக்கமற நிறைந்திருக்கும் காரியங்கள் என்று பலவற்றை நாம் குறிப்பிட முடியும். அவைகளில் முக்கியமானவை எனச் சிலவற்றை நாம் சுட்டிக் காட்டலாம். அச்சிலவற்றில், விசுவரூபமெடுத்து எங்கும் வியாபித்து, பெரும் ஆக்கிரமிப்பை நடத்தியிருப்பது " கவலை ". இருதயமே இல்லாத மனிதர்களைக் கூடப் பார்த்து விடலாம். ஆனால், இருதயத்தில் கவலை இல்லாதவர்களைக் கண்டுபிடிப்பது கடினம். கவலைகளுக்கான காரணமும், அவைகளின் தன்மையும் வேறுபட்டாலும், இந்தக் கவலைக்கு விதிவிலக்கானவர்கள் என்று நாம் ஒருவரையும் குறிப்பிட்டு விட முடியாது. சிலருக்குப் " பாலுக்கு சர்க்கரை இல்லை என்று கவலை ". பலருக்குக் " கஞ்சிக்கே உப்பில்லை " என்று கவலை. வேறுபாடு அவ்வளவே !

பொதுவாகக் கவனித்தால், நடந்தவைகளுக்காகக் கவலைப்படுவதைவிட, இன்னும் நடக்காமலிருப்பவைகளுக்காகவே மனிதர்கள் அதிகம் கவலைப்படுகிறார்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகிறது. இக்கவலை மனிதனின் மகிழ்ச்சியை உறிஞ்சி, நம்பிக்கையை நாசம் செய்து நடைபிணமாக அலைய வைக்கிறது.. ஆயினும், இப்படிப்பட்ட கவலை அர்த்தமற்றதென்றே இயேசு ஆண்டவர் கூறியுள்ளார். " கவலைப் படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? என்று (மத். 6 : 27).

இயேசு ஆண்டவரின் இக்கூற்றை நாம் ஏற்றுக்கொள்வதாக இருந்தால், கவலையை அலட்சியம் செய்ய வேண்டியது கட்டாயம். இருந்தாலும், நம்முடைய தலைப்பில் இடம் பெற்றிருக்கும் கவலையை நாம் அந்தக் கோணத்தில் பார்க்க வேண்டிய அவசியமில்லை. பவுலடியார் பேசும் கவலை, நாம் ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்க கவலையாக உள்ளது. இக்கவலை பற்றிப் பேசும் வசனம், பரிசுத்த வேதகாமத்தில் எனக்குப் பிடித்தமான நூலில் இடம் பெற்றுள்ளது. அப்போஸ்தலர் நடபடிகள் நூல் எனக்குப் பிடித்தமானதென்பதற்குப் பல காரணங்களை என்னால் அடுக்க முடியும். எல்லாவற்றையும் கொண்டு வர இங்கே இடமில்லாததால், சிலவற்றை மாத்திரம் உங்கள் தகவலுக்காகத் தருகிறேன். முதலாவது, சர்வ வல்ல தேவன் தம்முடைய அந்த ஞானத்தின்படி திட்டமிட்டு (எபே. 3 : 10), இரட்சகர் இயேசுவால், இரத்தம் சிந்தி சம்பாதிக்கப்பட்ட (அப். 20 : 28) சபை பற்றி இந்நூல் பேசுகிறது. மேலும், இம்மகிமையான சபைக்குள் பாவியாகிய மனிதன், இரட்சிப்படைந்து, எப்படி வரமுடியும் என்று இந்நூல் விளக்குகிறது. (அப். 16 : 30). இன்னும், புதிய ஏற்பாடு அறுதியிட்டுச் சொல்லும் ஒன்றான மெய் சபை பற்றிப் பேசும் முதல் நூலும் இதுதான், ஒரே நூலும் இதுதான்.

இப்பொழுது நமது ஆசானின் வழக்கப்படி இதன் பின்னணிக் குள்ளாகப் புகுந்து வெளியே வருவோம்.

சரி, இயேசு கிறிஸ்துவால் நற்செய்தியைச் சுமந்து செல்லும்படியாகப் பிரத்யேகமாகப் பிடிக்கப்பட்ட பவுல் தன் ஊழியத்தின் பாதையில் மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்டார். ஆயினும், இப்பயணங்களில் எதுவுமே சுகமான பயண அனுபவங்களைக் கொடுக்கவில்லை.

முதல் நற்செய்திப் பயணம் : அந்தியோகியாவில் தொடங்கி அந்தியோகியா விலேயே முடிகிறது. இப்பட்டணத்தில் அவர் துன்புறுத்தப்பட்டார் (அப். 13 : 50). இக்கோனியாவில் புறவினத்தார் மூலமாகப் பகை (அப். 14 : 2) லீஸ்திராவில் கேட்கவே வேண்டாம். மரித்துப் போனான் என்று எண்ணுமளவு கல்லுகளால் ஒரு நாயைப் போல அடிக்கப்பட்டு, தரதரவென்று பட்டணத்துக்கு வெளியே இழுத்துச் செல்லப்பட்டார் (அப். 14 : 19). பிறகு, தேவதயவால் சுதாரித்து எழுந்து, நற்செய்தியை அறிவித்து விட்டுத் திரும்பவும் அதே பட்டணங்களுக்கு வந்து, சீடருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்தில் நிலைத்திருக்கும்படி புத்தி சொல்லி, அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினான் (அப். 14 : 20 - 22).

இரண்டாம் நற்செய்திப் பயணம்: மீண்டும் அந்தியோகியாவி லிருந்துதான் ஆரம்பிக்கிறார். அப்படி ஆரம்பிக்கும் போது, முதல் பயணத்தில் தனக்குக் கிடைத்த பாடுகளும், உபத்திரவங்களும், போராட்

டங்களும் இருக்கக் கூடாது என்று சிறப்பு ஜெபம் ஏறெடுத்துப் புறப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனென்றால், தனது பேச்சும், மூச்சும் ராஜ்ஜியத்தில் சுவிசேஷத்தையும் பரப்புவதிலே தான் இருக்கிறதேயொழிய, மற்றபடி பட்ட வேதனைகளில் இருக்கவில்லை. ஊழியம் எனடறால் என்ன என்பதை இங்கே தெரிந்து கொள்ள வேண்டும்.

பிலிப்பி பட்டணத்தில் நற்செய்தி அறிவித்தபோது, பலமான எதிர்ப்புகள் கிளம்பி, அதிகாரிகள் முன்பாகக் கொண்டு போய் நிறுத்தப்பட்டு, உடைகளைக் கிழித்து, அரை நிர்வாணமாக்கப்பட்டு, அடித்து உதைக்கப் பட்டதோடு, இருட்டறையில் தள்ளப்பட்டு, தொழுமரத்தில் மாட்டி வைக்கப் பட்டான். பிறகு, அற்புதமான முறையில் விடுதலை பெற்ற பவுல், நேராக லீதியாள் வீட்டிற்குச் சென்று, சகோதரரைக் கண்டு ஆறுதல் சொல்லிப் போனான் ( அப். 10 : 40 ). யார் யாருக்கு ஆறுதல் சொல்லுவது என்று பாருங்கள். அடப் பவுலே, எப்படி உன்னால் இப்படி முடிந்தது?

மூன்றாம் நற்செய்தி பயணம்: முதல் இரண்டு நற்செய்திப் பயணங் களின் கொடுமையான அனுபவங்களினால் ஆட்டம் கண்டிருக்க வேண்டிய பவுலடியார், எதற்கும் அசராதவராக மூன்றாம் நற்செய்திப் பயணத்தை ஆரம்பித்தார். எபேசு, மக்கெதோனியா, அகாயா என்று விரிவான பயணம். இப்பயணத்தில் தான், " பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தார் " (அப். 19 : 11). இப்பயணத்தில் தான், துரோவா பட்டணத்தில், கிறிஸ்தவர்கள் வாரந்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய கர்த்த ருடைய பந்திக்கான வழிகாட்டி நெறிகளைக் கொடுத்தார் ( அப். 20 : 7 ). தூங்கி விழுந்த ஐத்திரு என்ற வலிபன் உயிரோடு எழுப்பட்டதும் இப்பயணத் தில் தான் (அப். 20 : 12) ஒரு கட்டத்தில், மிலேத்து என்னும் பட்டணத்துக்கு வந்து, மீண்டும் எபேசுவுக்குப் போகச் சமயமில்லாதபடியால், அப்பட்டணத்து மூப்பரை வரவழைத்து அவர்களோடு பல காரியங்கள் பற்றிப் பேசினார் (அப். 20 : 16, 17). அப்பேச்சை நாம் இங்கே கவனிப்பது நமக்கு நல்லது.

அப். 20 : 18ல், உங்களோடு இருந்தபோது, எப்படியெல்லாம் பிரசங் கித்தேன், என்னவெல்லாம் பேசினேன் என்று கூறாமல், உங்களிடத்தில் இருந்தபோது **எப்படி நடந்து கொண்டேன்** என்பதை நினைவுபடுத்துகிறார். இதன் மூலம் இன்று அநேகர் நினைப்பது போல் ஊழியம் என்பது வெறும் பேச்சு என்று நினைக்காமல், அது அன்றாட வாழ்க்கை என்பதைக் கோடிட்டுக் காட்டினார். எவ்வளவு ஊழியர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இவ்வுண்மை புரிந்திருக்கிறது.

அப். 20 : 19ல் ஊழியம் சம்பந்தமாக மேலும் சிலவற்றைக் குறிப்பிடு

கிறார். வெகு மனத்தாழ்மையோடு ஊழியம் செய்தேன் என்று. இந்நாட்களில், ஊழியம் செய்பவர்களிடம் மனத்தாழ்மை இருக்கிறதா என்று பூதகண்ணாடி வைத்துத்தான் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. பெருமையின் ஆவிகளால் நிரப்பப்பட்டு தங்களைச் சராசரி மனிதர்களுக்கு மேம்பட்டவர்களாக எண்ணி, வேறொரு உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தங்களை ஊழியர்கள் என்றும், போதகர்கள் என்றும் அழைத்துக் கொள்வது சிறுமை என்று நினைத்து, தங்களைப் பாதிரிகள் என்றும், குருக்கள் என்றும், டாக்டர்கள் என்றும், பிஷப்புகள் என்றும் அழைத்துக் கொள்ளவே ஆசைப்படுகிறார்கள். போகிற போக்கைப் பார்த்தால், மருத்துவ டாக்டர்களை விட ஊழிய டாக்டர்கள் நாட்டில் அதிகமாகி விடுவார்கள் போல் தெரிகிறது. மனத்தாழ்மை இல்லாததே இதற்குக் காரணம்.

இதே வசனத்தில், பவுல் **மிகுந்த கண்ணீரோடு ஊழியம் செய்கிறேன்** என்கிறார். இங்கே கண்ணீர் என்பது பெலவீனத்தின் அடையாளம் அல்ல. மாறாக, அது ஊழிய பாரத்தின் வெளிப்பாடாக உள்ளது. இவரது ஊழியத்தின் பாதையில் கண்ணீர் ஒரு பகுதியாக இருந்திருக்கிறதென்பதற்கு II கொரி. 2 : 4, பிலி 4 : 18 போன்ற வசனங்கள் சாட்சி பகர்கிறது. பவுலின் ஊழியம் இப்படி இருக்கும்போது, நாங்களும் ஊழியம் செய் கிறோம் என்று கூறும் கணிசமான பேர் ‘‘ தண்ணீரோடு ’’ ஊழியம் செய்து கொண்டுள்ளார்கள். இப்படி எழுதுவதற்காகத் துக்கப்படுகிறேன். ஆயினும், இதில் உண்மையில்லாமலில்லையே!

அடுத்து, இதே வசனத்தில், “ யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும் ஊழியம் செய்கிறேன்” என்றார். “ தீமையான யோசனைகள் ” என்றிருக்கிறபடியால் பலருடைய தலைகள் இந்த ஆலோசனையில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். எதற்கு இந்த ஆலோசனைகள்? பவுலுக்குத் தீமை செய்யும்படி! இது எப்படி இருக்கு? சரி, பவுல் அப்படி என்ன தான் தீமை செய்தார்? கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்துவின் சபைக்காகவும் தானே வேலை செய்தார். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை முடிந்தவரை எடுத்துச் செல்லத் தானே தன்னை ஒப்புக் கொடுத்தார். இந்தப் பொல்லாத யூதருக்கு இது பொறுக்கவில்லை. கூடி ஆலோசித்திருக்கிறார்கள். பிறருக்குத் தீமை செய்யும்படி “ ரூம் ” போட்டு யோசிக்கும் வேலைக்குத் தாயம் போட்டவர்கள் இவர்கள் தானோ? யாருக்குத் தெரியும்! இவர்களின் யோசனைகளால் வந்த சோதனைகளைப் பற்றிக் கொஞ்சமும் கலங்காமல் தன்னுடைய ஊழியப் பணியைச் செவ்வையாகச் செய்துள்ளார்.

இப்படியாகப் பேசிக் கொண்டு வருகிறவர் தான், 21, 22 ஆகிய

வசனங்களில் " **இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன். இங்கே எனக்கு நேரிடுங் காரியங்களை அறியேன். கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்** " என்று கூறுகிறார். எருசலேமுக்குப் போக வேண்டாம் என்பதும், மீறிப் போனால் என்ன நடக்கும் என்பதும் இங்கு மாத்திரம் கொடுக்கப்பட்ட எச்சரிப்பு அல்ல. வேறு வசனங்களிலும் சொல்லப்பட்டுள்ளது ( அப். 21 : 4, 11 ). நமக்கெல்லாம் ஊழியத்தின் பாதையில் " பிரச்சனை, ஆபத்து " என்ற செய்தி வருமானால், அப்படியே பதுங்கி, சம்பந்தமில்லா சாக்குப்போக்குகளை லாவகமாகக் கூறி நைசாக திசையை மாற்றிக் கொள்வோம்.

ஆனால், பவுலடியாரின் மனநிலை முற்றிலும் மாறுபட்டு இருந்துள்ளது. ஆம், " **அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்** " என்று அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாக, நெத்தியடியாக உரக்கக் கூறுகிறார். பவுலடியாரால் எப்படி இவ்விதம் கூற முடிந்தது? இதன் இரகசியம் I கொரி. 15 : 31ல் இடம் பெற்றுள்ளது. ஆம், கொரிந்தியருக்கு எழுதும்போது, " **நான் அனுதினமும் சாகிறேன்** " என்று கூறியுள்ளார். அதாவது, ஊழியத்தினிமித்தம் தினந்தோறும் செத்துள்ளார். ஒருவேளை, சரீரத்தில் உயிரோடு இருந்திருந்தாலும் ஆவிக்குரிய ரீதியில் பாவத்திற்கு மரித்தவராகவும், மாம்சத்திற்கு மரித்தவராகவும், உலகத்திற்கு மரித்தவராகவும் இருந்துள்ளார். ஆகவே, அவரை எதுவும் ஒன்றும் செய்ய முடியவில்லை. பொதுவாக, மரித்துப் போனவனை எதுவுமே ஒன்றும் செய்யாது. வேண்டுமானால், ஒரு பிணத்தண்டை போய் ஏதாவது முயற்சித்துப் பாருங்களேன்! அப்படிப்பட்டதோர் ஆவிக்குரிய வாழ்வைத் தான் பவுலடியார் நடத்தியுள்ளார்.

நாமோ எதற்கெடுத்தாலும் கவலைப்படுகிறவர்களாகவும், ஒன்றுமில்லாததை எல்லாம் பெரிதாக எண்ணுகிறவர்களாகவும், எதிர்ப்புகளைக் குறித்து அஞ்சுபவர்களாகவும், தூஷிக்கிறவர்களைக் குறித்துக் கலங்குகிறவர்களாகவும், இப்பூலோக வாழ்க்கையை நினைத்துப் புலம்புகிறவர்களாகவும் இருப்போமானால் பவுலடியாரைப் போன்று நாம் பாவத்திற்கும், மாம்சத்திற்கும், உலகத்திற்கும் இன்னும் மரிக்காதவர்களாக இருக்றோம் என்று தான் பொருள். பக்தி நிலையின் உச்சத்தை அவர் தொட்டபடியால் தான், தன் ஊழியப் பாதையில் ஏராளமான சரீரப் பாடுகளைப் பட்ட பிறகும், கொஞ்சமும் தடுமாற்றமின்றி, " **அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம்** " என்று எழுத முடிந்தது. ஏராளமான பாடுகளைப் பற்றி, இப்படி " லேசான உபத்திரவம் " என்றெழுதுவது, நம்முடைய பார்வையில் " கொஞ்சம் ஓவராகத் " தெரிந்தாலும்,

அவருடைய ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமாகவே நாம் இதைப் பார்க்க வண்டும். இந்த மனிதரை நினைத்தால் தலையே சுத்துது. எப்படி? எப்படி? என்று.

நம்மைப் போன்றவர்களால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குப் பவுலடியார் எண்ணுவதற்கும், பேசுவதற்கும் காரணம் பரலோகம் பற்றிய அவருடைய தெளிவான பார்வைதான். ஆகவே தான், " **நித்திய வீடாகிய பரம வாசஸ்தலத்தை வாஞ்சிக்கிறவர்களாயிருக்கிறோம்** " என்று ( II கொரி 5 : 1, 2 ) கொரிந்தியருக்கும், " **நம்முடைய குடியிருப்பு பரலோகம்** " (பிலி 3 : 20) என்று பிலிப்பியருக்கும், " **மேலானவைகளைத் தேடுங்கள்** " ( கொலோ 3 : 1) என்று கொலோசெயருக்கும் எழுத முடிந்தது. இச்சிந்தையில் அவர் மூழ்கி இருந்தபடியால் தான், அவைகளில் ஒன்றையுங் குறித்து கவலைப்படேன் என்று அவரால் சொல்ல முடிந்தது.

பவுலடியாரைப் போன்று நாமும் பரலோக பார்வை பெற்றுக் கொள் வோமேயானால், கிறிஸ்துவுக்காக வாழும் வாழ்க்கையில் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வெற்றியாய் நடத்த முடியும். இச்சீரிய சிந்தையை பவுலடியார் பெற்றுக் கொள்வதற்கு எவைகள் உதவி செய்தன என்று அப்.20 : 24 - ன் எஞ்சிய பகுதியின் வார்த்தைகள் நமக்கு எடுத்துக் கொடுக்கின்றன. அவைகளிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

### I பரலோகத்திற்காக உயிரைப் பற்றிக் கவலைப்படவில்லை

பரலோகத்திற்கான தன்னுடைய பயணத்தில், தனக்குச் சவாலாக வரும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பவுல் வெற்றிநடை போட்டதற்கான முதல் காரணம், அவர் தன்னுடைய உயிரைப் பற்றிக் கவலைப்படாததே.

ஆம், " **என் பிராணனையும் அருமையாக எண்ணேன்** " (அப் 20 : 24) என்று விளம்புகிறார். பொதுவாக, எல்லோருக்குமே உயிர் என்பது ஒரு பொருட்டு தான், அருமையானது தான். பூமியின் வாழ்க்கையில் ஒருவன் படுகின்ற எல்லாப் பாடுகளும் இந்த உயிரை வாழவைப்பதற்குத் தான். ஆனால், பவுலடியாருக்கோ கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்த நாள் முதல்கொண்டு, அவருடைய உயிர் அவருக்கு ஒரு பொருட்டாக இருந்ததேயில்லை. ஆகவே தான், பிலிப்பி பட்டணத்து கிறிஸ்துவின் சபையாருக்கு இப்படியாக எழுத முடிந்தது " **கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்** (பிலி 1: 21) என்று.

கிறிஸ்தவுக்காக இந்த உயிரை விடும்போது பரலோகத்தில் தனக்கு

என்ன கிடைக்கும் என்பதைத் திட்டமாக அறிந்திருந்தார். அப்படி என்ன தான் கிடைக்கும் என்கிறீர்களா? வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுவது போல் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன். மேலான சரீரம் ( I கொரி 15 : 51); மேலான வீடு (II கொரி 5 : 1, யோவான் 14 : 2 – 3); மேலான சுதந்திரம் (I பேதுரு 1: 5). இவை எல்லாவற்றுக்கும் மேலாக, " மேலான ஐக்கியம் ". ஆம், தேவாதி தேவனோடும், நம் இரட்சகராகிய இயேசுவோடும் வாழும் வாழ்க்கை பாழாய்ப்போன மனிதர்களாகிய நமக்கு. இது போதாதா?

அருமையானவர்களே, பவுலடியாரைப் போன்று பரலோக சிந்தையை மனதில் ஏந்தி, கிறிஸ்துவுக்கான வாழ்க்கையில் எதைப் பற்றியும் கவலைப்படாமல், வெற்றியாய் நடத்த நம்மை ஒப்புக் கொடுப்போமாக!

### II ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்க விரும்பினார்

பரலோகத்திற்கான தன்னுடைய பயணத்தில், தனக்குச் சவாலாக வரும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் பவுல் வெற்றிநடை போட்டதற்கான அடுத்த காரணம், தன் ஓட்டத்தை சந்தோஷமாக முடிக்க விரும்பியது தான்.

பொதுவாகவே, ஓட்டத்தை ஆரம்பிக்கிற எல்லோரும் அதை முடிப்பதில்லை. அது விளையாட்டு சம்பந்தமான ஓட்டமாக இருந்தாலும், வாழ்க்கை ஓட்டமாக இருந்தாலும், ஆன்மீக ஓட்டமாக இருந்தாலும் இது தான் யதார்த்த நிலை. கிறிஸ்துவுக்காக ஓட்டத்தை ஆரம்பித்த கலாத்தியா நாட்டுக் கிறிஸ்தவர்கள் தங்கள் ஓட்டத்தை நன்றாய் நடத்தவில்லை. " ஆம், நீங்கள் நன்றாய் ஓடினீர்களே " (கலா. 5 : 7). இப்பொழுது என்ன ஆச்சு உங்களுக்கு என்று வியந்து எழுதினார்.

பவுலடியாரைக் கொண்டு ஆவியானவர் வெளிப்படுத்தின வார்த்தை களைக் கவனிக்கும் போது, இன்னொரு கருத்தும் நமக்குத் தெரிய வரு கிறது. ஆம், ஓட்டத்தை " சந்தோஷத்தோடே " முடிக்க விரும்பியுள்ளார். மற்ற ஓட்டங்களைப் போலல்லாமல், கிறிஸ்தவ ஓட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டால், ஒருவன் எப்படி ஓடினாலும் அது ஒரு நாளில் முடிவுக்கு வரும். ஆனால், எல்லோருக்கும் அந்த ஓட்டம் சந்தோஷமாக முடியாது. எப்படியெனில், ஓட்டத்தின் முடிவில், " **வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே** " (மத். 25 : 34) என்று ஏற்றுக் கொள்ளப்படுபவர்களும் இருப்பார்கள், " **சபிக்கப் பட்டவர்களே... நித்திய அக்கினியிலே போங்கள்** " ( மத். 25 : 41 ) என்று சாடப்படுபவர்களும் இருப்பார்கள். இந்த உண்மையை அறிந்ததால் தான் ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிக்கப் பவுல் விரும்பியுள்ளார். அவ்விதமாகவே முடித்தும் காட்டினார் (II தீமோ. 4 : 7, 8).

அன்பானவர்களே, பவுலடியாரைப் போன்று பரலோக சிந்தையை நம் மனதில் பதிய வைப்போமானால், கிறிஸ்தவ வாழ்வில் எதிர்வரும் எதைப் பற்றியும் கவலைப்படாமல், நம்முடைய பக்தி ஓட்டத்தை சந்தோஷமாக முடிக்க முடியும்.

### III **பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற விரும்பினார்**

பரலோகத்திற்கான தன்னுடைய பயணத்தில், எது பற்றியும் கவலைப்படாமல், பவுலடியார் வெற்றி நடை போட்டதற்கான இன்னுமொரு காரணம், பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பியது.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்காலம் நம்பிக்கைதுரோகம் பற்றிக் கவலைப்படாத ஒரு காலம். குடும்பங்களிலும், சமுதாயத்திலும் அது ஓர் அன்றாட நிகழ்வாகிவிட்டது. இப்படி ஆகிடுச்சே, இப்படிப் பண்ணீட்டீங்களே, இப்படியுமா செய்வாங்க, அப்படி நான் நெனைக்கவே இல்லையே, ஐயோ நான் இனி என்ன செய்வேன் என்பன போன்ற அவலக்குரல்களை, புலம்பல் சத்தங்களை நாம் பல நேரங்களில் கேட்க முடிகிறது. இதற்கெல்லாம் காரணம் துரோகம் தான். எதிர்பார்ப்பு பொய்த்துப் போவது தான். ஆனால், பாதிக்கப்பட்டவர்களைத்தவிர யாரும் அது பற்றிப் பெரிதாகக் கவலைப்படுவதில்லை. வாழ்க்கையின் ஓர் அங்கமாக சமுதாயம் இதை ஏற்று சீரணித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், பவுலடியார் வேறுபட்ட சிந்தை உடையவராக இருந்துள்ளார். இயேசுவால் நம்பிக் கொடுக்கப்பட்ட ஊழியத்தை நிறைவேற்றவே விரும்பியுள்ளார். எந்த ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கும் விருப்பம் தேவை. ஊழியத்தின் பாதையில் அந்த விருப்பம் பவுலுக்கு இருந்தது. தான் அழைக்கப்பட்ட விதத்தையும், தன்னிடத்தில் கொடுக்கப்பட்ட பொறுப்பையும் (அப். 9 : 4, 15). அவர் எப்பொழுதும் நினைவில் கொண்டிருந்தார். ஆகவே தான், பிலிப்பியருக்கு எழுதும்போது, " ... **நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்** " என்றார். (பிலி. 3 : 12).

ஆகையால், அருமையானவர்களே, பவுலடியார் பெற்ற ஊழியத்தை நிறைவேற்ற விருப்பம் கொண்டு சாதித்தது போல், நாம் பெற்றுக் கொண்ட அல்லது பெற்றுக் கொள்ள விரும்பும் இரட்சிப்பை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆசை கொண்டு செயல்படுவோமானால் அது சாத்தியமே. இதற்கு அடிப்படைத் தேவை பரலோகம் பற்றிய சிந்தை. இச்சீரிய சிந்தையை நாம் பெற்றுக் கொள்வோமானால், கிறிஸ்தவ வாழ்வில் எக்கவலையும் படாமல் நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்ற முடியும்.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

# ஏன் நாங்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுகிறோம்?

Bro. J.C சோட்

கர்த்தருடைய பந்தி என்று வரும்போது, இயேசுவும், அப்போஸ்தலர்களும், பஸ்கா பண்டிகையில் பங்கு பெறும்படியாக எருசலேமிலுள்ள மேல் வீட்டில் கூடிவந்த சம்பவத்திற்கு நாம் செல்ல வேண்டியாதயிருக்கிறது. பஸ்கா பண்டிகையானது, ஆட்டுக் குட்டியின் இரத்தம் எந்த இஸ்ரவேலர் களின் வீட்டு வாசல் நிலைக்கால்கள் இரண்டிலும், நிலையின் மேற் சட்டத்திலும் தெளிக்கப்பட்டிருந்ததோ அவர்களின் வீடுகளை மரணதூதன் கடந்து போனதை நினைவு கூரும்படியாக வருடந்தோறும் கடைபிடிக்கப்பட்டது ( யாத்திராகமம் 12 ). புதிய ஏற்பாட்டின் வருகையால் இந்தப் பண்டிகை விருந்து முடிந்து போய் விட்டது. ஆயினும் இப்பொழுது கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுகிறார்கள்.

வேத வசனம் இப்படிச் சொல்லுகிறது, “ அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்தத் திராட்சப் பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர்கள் ஸ்தோத்திரப் பாட்டைப் பாடின பின்பு, ஒலிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள் ” (மத்தேயு 26 : 26 - 30).

இப்போது என்னோடு I கொரிந்தியர் 11:23-29 வசனங்களுக்கு திருப்பிக் கொள்ளுங்கள். அப்போஸ்தலானாகிய பவுலின் வார்த்தைகளை நாம் வாசிப்போம். “ நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்

கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப் பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து , ஸ்தோத்திரம் பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப் படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப் படியே பாத்திரத்தையும் எடுத்து; இந்தப்பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும்போதேல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தை புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து குற்றமுள்ள வான யிருப்பான். எந்த மனுஷனும் தன்னைத் தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தி னாலெனில், அபாத்திரமாய்ப் போஜபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான் ” .

மேலே உள்ள வசனப்பகுதியில், நாம் விசேஷமாக கவனம் செலுத்த வேண்டிய காரியங்கள் இருக்கின்றன. முதலாவது, பவுல் தான் கர்த்தரிடத் திலிருந்து பெற்றுக்கொண்ட செய்தியை கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு ஒப்புவித்ததாக சொன்னார். இரண்டாவதாக, கிறிஸ்துவின் சரீரத் தை நினைவு கூரும்படி அப்பத்தைப் புசிக்க வேண்டுமென்றும், கிறிஸ்து வின் இரத்தத்தை நினைவு கூரும்படி பாத்திரத்தில் பானம் பண்ண வேண் டும் என்றார். ஏனென்றால், கிறிஸ்துவின் இரத்தம், கிறிஸ்துவின் பிர மாணம் அல்லது புதிய ஏற்பாட்டை உறுதி செய்யும்படியாக சிந்தப்பட்டது. முன்றாவதாக, எவ்வளவுக்கதிகமாக அல்லது அடிக்கடி அவர்கள் கர்த்தரு டைய பந்தியில் பங்கு பெறுகிறார்களோ, அப்போதெல்லாம் கர்த்தர் வருமள வும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஆனால், எவ்வளவுக்கதிகமாக அல்லது அடிக்கடி என்பதின் பொ ருள் என்ன? அப்போஸ்தலர் 20;7 -ல் பவுல் அப்பம் பிட்கும், நோக்கத் திற்காக துரோவாவில் கிறிஸ்தவர்களோடு கூடின உதாரணம் நமக்கு இருக் கிறது. வாரத்தின் முதல் நாள் என்பது எத்தனை நாட்களுக்கு ஒரு முறை வருகிறது? வாரத்திற்கு ஒருமுறை. கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்

படி ஆதிக்கிறிஸ்தவர்களுக்கும் இந்த உண்மை பொருந்துகிறதாகவே இருக்கிறது. நாம் வியாழக்கிழமைகளிலோ அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு ஒரு முறையோ சபையாகக் கூடி வருவதற்கு நமக்கு அதிகாரமில்லை. மாறாக, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படியாக வாரத்தின் முதல் நாளில் கூடினார்கள் என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வாரத்திற்கும் முதல் நாள் என்று இருக்கிறபடியால் கிறிஸ்துவை நினைவுகூரும் நோக்கத்திற்காக வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறும்படி கூடி வந்திருக்கிறார்கள். நாம் அவர்களுடைய மாதிரியை பின்பற்றுகிறவர்களாக இருந்தால் இன்னும் நாம் அதே காரியத்தைப் பின்பற்ற வேண்டும்.

நான்காவதாக, கர்த்தருடைய பந்தியில் நாம் பங்கேற்கும்போது, நாம் இரட்சிக்கப்படும்படியாகவும், நித்திய ஜீவனின் நம்பிக்கையைப் பெறும்படியாகவும் தியாகங்கள் செய்த இயேசுவை நினைவு கூரும்படி அந்த சிலுவையைத் திரும்பி பார்க்கிறோம். நாம் அப்பம் பிட்கும்போது நாங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்பதையும் அவர் மீண்டும் வருவார் என்பதையும் தெரிவிப்பவர்களாக இருக்கிறோம்.

ஐந்தாவதாக, நாம் அபாத்திரமாய் கர்த்தருடைய பந்தியில் பங்குபெற்றால் அதாவது, கர்த்தருக்கு உண்மையில்லாதவர்களாயிருந்து, நாம் செய்கிறவைகளில் நேர்மையில்லாதவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் சரீரத்தையும், இரத்தத்தையும் தவறாகப் பயன்படுத்திய குற்றவாளிகளாயிருப்போம். வேறுவிதமாகச் சொன்னால், நாம் அபாத்திரமாய் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றால் நமக்கு நாமே ஆக்கினைத் தீர்ப்பை வருவித்துக் கொள்கிறோம்.அதன் பொருள், நாம் பந்தியில் பங்கேற்கும் முன்பு பூரணமாயிருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால், கர்த்தருடைய பந்தி நமக்கும், கர்த்தருக்கும் சரியானாதாக இருக்க வேண்டுமானால் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டுவது மிகவும் அவசியம்.

ஆறாவதும் கடைசியுமாக,நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு, நம்மை நாமே சோதித்தறிவது மிகவும் முக்கியம். அதன் மூலம் நம் இருதயமும், வாழ்க்கையும் தேவனுக்கு முன்பாக சரியாக இருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். நம்மால் முடிந்தவரை, நாம் சிறந்ததை செய்கிறோம் என்று அறியும் போது தான்,

நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்கயாயிருக்கிறோம் என்று பொருள்படும். அப்போது தான், நாம் பந்தியில் பங்கு பெற வேண்டும். கர்த்தர் நம்மிடமிருந்து எதை எதிர்பார்க்கிறாரோ அதை அடிப்படையாக வைத்து நாம் அவருக்கு உண்மையாயிருக்கிறோம் என்று நேர்மையான இருதயத்தோடு சொல்ல முடியாவிட்டால், நம்முடயை பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தொடர்ந்து வாரந்தோறும் கர்த்தருடைய ஜனங்களோடு கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதற்கு முன்பு கர்த்தரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

என் நண்பர்களே, கர்த்தருடைய சபையில் அங்கம் வகிக்கும் ஒரு கிறிஸ்தவனுக்கு கர்த்தருடைய பந்தி மிக முக்கியமானது. இது கிறிஸ்துவை நினைவுகூருவதற்கும், அவரிடத்தில் உண்மையாயிருப்பதற்கும், ஒரு வழியாக இருக்கிறது. இது மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காக ஆகாரமாகப் புசிக்க வேண்டிய ஒன்றல்ல, அல்லது அதன் நோக்கத்தை புரிந்து கொள்ளாமல் பங்கு பெற வேண்டிய ஒன்றும் அல்ல. இது கிறிஸ்தவனை பலப்படுத்துவதற்காகவும், அதே நேரத்தில் கர்த்தருடைய பந்தி மூலமாக, மற்றவர்களை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வருவதற்கான ஒரு வாய்ப்பாகவும் கொடுக்கப்படுகிறது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? கர்த்தருடைய பந்தி உங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது? நீங்கள் கர்த்தருடைய ஜனங்களோடு வாரத்தின் முதல் நாள் தோறும் அப்பம் பிட்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் ஒரு கிறிஸ்தவராகும்படி உங்களை உற்சாகப் படுத்த விரும்புகிறோம். அதை நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவில் உள்ள உங்கள் விசுவாசத் தை அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக தண்ணீரில் அடக்கம் பண்ணப் பட்டு, முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதினால் செய்ய முடியும் (மாற்கு 16:16; அப்போஸ்தலர் 2:38 ). ஒரு கிறிஸ்தவனாக கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தினராக, கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவித்துக் கொண்டு, வாரத்தின் முதல் நாள் தோறும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறலாம். இதன் மூலம் கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை உறுதி செய்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை உலகிற்குப் பறைசாற்ற முடியும். ●

---

உங்களிடம் இருப்பவைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
அது ஒரு நாள் நீங்கள் நினைப்பதைவிட அதிகமாகப் பயன்படும்.

# எண்ணங்கள் நம்மை உருவாக்குகிறது

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**ஆ**ம், எண்ணங்கள் நம்மை உருவாக்குகிறது. எல்லாக் காவலோடும் நம் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். ஒருவனின் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான் (நீதி 23 : 7). மனிதனின் நற்பண்பு என்னும் கோயிலை அமைதியாகக் கட்டுவது நம்முடைய எண்ணங்கள் தான். அவைகள்தாம் கட்டிடத்திற்கு முழு நிறத்தையும், அமைப்பையும் கொடுக்கிறது. நாம் எப்படி இருக்கவேண்டும் என்று எண்ணுகிறோமோ அப்படி ஒருவேளை இல்லாமல் இருக்கலாம். ஆனால், நம் எண்ணம்தான் நம்மை நிர்ணயிக்கிறது.

நம் ஒவ்வொருவரின் உள்ளும், புறமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாகவே உள்ளது. (மத் 15 : 18 – 20; லூக்கா 6 : 45). உள்ளத்தில் இருக்கும் எண்ணம் நம்மை உலகத்திற்குக் காட்டுகிறது. கிணறு போன்று இருக்கும் நம் உள்ளத்தில் இருந்துதான் பேச்சு, செயல் போன்ற பக்கட்டுகள் வெளியே வருகின்றன. இதைத்தான் இயேசுவானவர் மத் 5 : 21 – 28 வசனங்களில் விபரமாக பேசியிருக்கிறார். எண்ணங்கள் நம்மை உருவாக்குகிறதினால் உள்ளான மனிதனுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். (I பேதுரு 3 : 3 – 6). வெளியே தெரியும் மனிதன் பற்றி நிறைய காரியங்கள் கேள்விப்படுகிறோம். ஆனால், கவலைக்கிடமாக இருக்கும் உள்ளான நிலையைப் பற்றி அறிவதில் வெகு தொலைவில் இருக்கிறோம். உள்ளத்திற்குள் இருப்பவைகளோடு நமக்கு பின்னும், முன்னும் இருக்கிற காரியங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவைகள் சிறு, சிறு விஷயங்களாகவே இருக்கிறது.

இறுதியாக, நம் எண்ணங்கள்தான் நாம் அடையவேண்டிய இலக்கை நிர்ணயிக்கிறது. எண்ணத்தை விதைத்து செயலை அறுக்கிறோம். செயல் விதைக்கப்பட்டு அங்கே ஒரு பழக்கம் அறுக்கப்படுகிறது. பழக்கம் விதைக்கப்பட்டு அங்கே ஒரு பண்பு அறுக்கப்படுகிறது. பண்பு விதைக்கப்பட்டு வாழ்வு அறுக்கப்படுகிறது. வாழ்க்கை விதைக்கப் படும்போது இறுதியாக இலக்கு அறுக்கப்படுகிறது. தனிப்பட்ட வாழ்க்கையானாலும், தேசிய

அளவிலான காரியங்களானாலும் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு உண்டு. ஆகவே, ஒரு சல்லிக்காசுக்காக நம்முடைய எண்ணங்களை விற்றுவிடக்கூடாது. வேறு வகையாகச் சொன்னால் எண்ணங்களின் படிதான் நம்முடைய நித்தியம் இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! எண்ணங்கள் பற்றி பார்த்தோம். அடுத்ததாக, நம்முடைய இயற்கையான பண்புகள் பற்றி பார்ப்போம். பூமியிலிருந்து பரலோகத்திற்கு உள்ள தூரம் ஏதோ அதன் உயரத்தின் அளவு அல்ல. மாறாக, நம்முடைய மனப்பான்மையில் அது அருகிலா அல்லது தூரத்திலா என்பது உள்ளது. தேவனைப்பற்றி அவருடைய சபையைப்பற்றி, நம் சகோதரர்களுடன் நமக்குள்ள உறவு,நம்முடைய குடும்பம் ஆகிய இவைகளில் நம் பண்புகள் எப்படி உள்ளது என்பது தான் கணக்கு. இந்தப் பண்புகளில் பாவம் நடந்துவிடக் கூடாது என்பதற்காக நம்முடைய தேவன் கொடுக்கிறதான முக்கியத்துவங் களைப் பார்ப்போம். ரோமர் 1 : 29 – 31 முடிய ஒரு நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. 23 பாவங்கள் அங்கே கூறப்பட்டுள்ளது. கலா 5 : 19 – 21 முடிய 17 பாவங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. I கொரி : 13 : 4 – 8 வசனங் களிலும் இவைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

(லூக்கா 15 : 11 – 32) ஆகிய பகுதிகளில் இரண்டு ஊதாரி பையன்கள் பற்றிப் பேசப்படுகிறது. ஒருவன் தூர தேசத்தில், மற்றவன் தன் பண்பில் தவறு செய்தவனாக பேசப்படுகிறான். மூத்தவன் பரிசேயனைப்போல் அடுத்தவனை குற்றப்படுத்தி,விரோதித்து, பொறாமை உணர்வுடன் காணப்படுகிறான். எல்லா பரிசேயர்களும் சாகவில்லை.

ஊதாரித்தனமாக இருப்பவர்களை நாம் கடுமையாக வர்ணிக்கிறோம். ஆனால், பொறாமை,கோபம், பெருமை, மற்றவர்களை நியாயந்தீர்ப்பது போன்றவைகளை பாவமாகவே எண்ணாமல் ஏதோ தெரியாமல் நடக்கும் குற்றங்கள் அல்லது ஏதோ முதிர்ச்சி அடையாத நிலையால் செய்யும் தவறுகள் என்றுதான் பார்க்கிறோம். ஆனால் இயேசு கிறிஸ்து இவைகளைப் பற்றிப் பேசுவதை படித்தோமேயானால் ( மத்தேயு 23 : 27, 28 ) மாயக்காரராகிய ......... மனுஷருக்கு நீதிமான் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலே மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் என்று சரியாகச் சொல்லியிருக்கிறார்.

நம்முடைய எண்ணங்கள் எவ்வாறு உள்ளது? எண்ணங்களின் நிறம் எப்படியுள்ளது? இதுதான் முக்கியம். இவைகள் தான் நம்முடைய உண்மை நிலையை உலருக்குக் காட்டுகிறது. எப்போதும் கருப்பு நிற எண்ணம் கொண்டுள்ளோமா? அதாவது, நம்பிக்கையில்லாமல் தோற்றுபோன

மனநிலையோடு, எதுவுமே சரியாக இருக்காது யாரையுமே நம்பமுடியாது. ஆனால், எல்லோருமே எப்படியோ கணக்குக் கொடுத்தாக வேண்டும் என்று எண்ணும் ஒரு மனநிலை. (பிலி 4 : 13, யோபு 1 : 8 – 12)

இரண்டாவதாக, நம்முடைய எண்ணங்கள் சிகப்பு நிறத்தைக் கொண்டுள்ளதா? அதாவது எப்போதும் வெறுப்பு, கோபம், எரிச்சல், வன்மம் இவைகளையே கொண்டுள்ளதா? (I பேது 2 : 1, கலா 5 : 19 – 21; I கொரி 3 : 1 – 3; எபே 4 : 26; கொலோ 3 : 8) ஆகிய வசனங்களை வாசிப்போம்.

நம்முடைய எண்ணங்கள் மஞ்சள் நிறமாக உள்ளதா? மஞ்சள் நிறமென்றால் கோழையான எண்ணங்கள். அதாவது, ஆவிக்குரிய பலவீனமான நிலை. நாம் பலமுள்ளவர்களாகவும், தைரியமுள்ளவர் களாயுமிருக்க வேண்டும். (I கொரி 16 : 13; எபே : 6 : 10). ஒரு தானியேலாக இருகே துணிச்சல் கொள்ளுவோம்.

நம்முடைய எண்ணங்கள் வெண்மை நிறமாக உள்ளதா? பிலி : 4, 8ல் அப்பேர்ப்பட்ட அழகான வெண்மை நிறப் பண்புகள் வர்ணிக்கப்பட்டுள் ளது. அவைகளை வாசித்து அந்த சிந்தனைகளைப் பெற்றுக் கொள்வோம்.

அருமையானவர்களே, நம்முடைய எண்ணங்களைக் கட்டுப்படுத்த கற்றுக் கொள்ள வேண்டும். பொதுவாகவே நம்முடைய எண்ணங்களில் தீமையான எண்ணங்களும், சிந்தனைகளும் தான் சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. தீமையின் எண்ணங்கள் நினைப்பதை விட அதை நடைமுறைப்படுத்தியும் விடுகிறோமே அது பாவம். நம் தலைக்கு மேல் பறவைகள் பிறப்பதை தடுக்க முடியாது. ஆனால், அவைகள் நம் தலைமுடியில் கூடுகட்டாமல் பார்த்துக் கொள்ள நம்மால் முடியும். நம் எண்ணங்களைத் தூண்டிவிடக்கூடிய நாம் காதால் கேட்பவைகள், கண்ணால் பார்ப்பவைகள், வாசிப்பவை இந்த மூன்றையும் மிகவும் ஜாக்கிரதையாக கவனித்தாக வேண்டும். தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்திருக்கும்போது அவைகள் நம்மை பாவம் செய்ய விடாமல் காத்துக் கொள்ளும் (சங் 119 : 11).

சங் : 139 : 23, 24 ஆகிய தேவனுடைய வார்த்தைகளில் உள்ளபடி தேவனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும்; என்னைச் சோதித்து என் சிந்தைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும் என்று நாம் தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும்.

அருமையான சகோதரிகளே, எண்ணத்தில் நாம் சுத்தமுள்ளவர்களாயும், உண்மையுள்ளவர்களாயுமிருப்போம். இது மிக முக்கியம். இவை இரண்டும் இல்லையென்றால் பக்தி வாழ்க்கை இல்லாமல் போய்விடும். எனவே, எண்ணங்களை காத்துக் கொள்வோம். தேவன் அதற்கு உதவி செய்வாராக!! ஆமென்!!!

வாலிபர் பகுதி

# வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேட ...

Bro. பென்னி மார்ட்டின்

இயேசு கிறிஸ்துவின் நல் நாமத்தில் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மறு படியும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். மனிதர்களாகிய நாம் இப்பூமியில் வாழும் வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டுபிடிக்கப் பல நூற் றாண்டுகளாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நமக்கு முன்பு வாழ்ந்த மனிதன் எண்ணற்ற காரியங் களைக் கண்டுபிடித்திருக்கிறான். நாம் வாழ்கின்ற உலகம் விஞ்ஞான உலகம், நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்க முடியாதவைகளை எல்லாம் மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தோல்வியையே தழுவியிருக்கிறான்.

குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்கிற டார்வின் கொள்கையை யெல்லாம் நம்மால் நம்ப முடியாது. இவ்வுலகில் வாழ்ந்த அநேக தத்துவ ஞானிகள் வாழ்க்கையின் அர்த்தம் பற்றி தத்துவங்களை உதிர்த்திருக் கிறார்கள். ஆனால், வாழ்க்கையின் அர்த்தத்தை சாலொமோன் ஞானியைப்போல எந்த ஒரு மனிதனாலும் கண்டறிந்து கூறியிருக்க முடியாது. இஸ்ர வேலின் சிங்காசனம் அதன் முழுவல்லமையிலும், கம்பீரத்திலும் இருக்கும் போது சாலொமோன் அரியணையில் அமர்ந்தார். சாலொமோனுக்கு ஞானம், செல்வம், புகழ் போன்றவைகள் திரளாயிருந்தன. இவைகளின் மத்தியில் சாலொமோன் ராஜா வாழ்க் கைக்கான அர்த்தத்தைத் தேடினார். இது பிரசங்கி புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவர் இவ்விதமாக எழுதினார் " மாயை, மாயை எல்லாம் மாயை " என்று. சூரியனுக்குக்கீழே மனுஷன் படுகிற எல்லாம் பிரயாசத் தினாலும் அவனுக்குப் பலன் என்ன? ஒரு சந்ததி போகிறது, மறுசந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது (பிரசங்கி 1: 2 – 4).

நான் இந்த உலகத்தை விட்டுப்போன பிறகு எனக்கு என்ன பயன் உண்டாகும்? நான் என்ன வித்தியாசத்தை ஏற்படுத்துவேன்? இது போன்ற

கேள்விகள் மனித ஆத்துமாவுக்கு பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து தொந்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறது. சாலொமோன் ராஜா உலக சிற்றின்பங்களினால் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடினார். அவருடைய கண்டுபிடிப்புகள் எல்லாம் முக்கியத்துவம் வாய்ந்தவைகள். ஏனென்றால், அவர் மட்டுமே உலகத்தின் சிற்றின்பங்கள் எல்லாவற்றிலும் சிறந்தவைகளை முழுமையாக அனுபவித்தார்.இந்த உலகில் எந்த ஒரு மனிதனும் அவரைப்போல் எல்லாவற்றையும் விரும்பிய வண்ணம் அனுபவித்ததில்லை. எனவே, அவர் வாழ்க்கையின் அர்த்தத்தை எந்தெந்த கோணங்களில் தேடியிருக்கிறார் என்பதை அலசிப்பார்த்து நாமும் வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்பதைக் கண்டு கொள்வோம்.

### I சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை ஞானத்தில் தேடினார்

I இராஜாக்கள் மூன்றாம் அதிகாரத்தில் சாலொமோன் ஞானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எந்த முயற்சியையும் எடுக்க வேண்டியதில்லை. மாறாக, தேவனிடம் அதைக் கேட்டார். தேவன் அதை அவனுக்கு ஈவாகக் கொடுத்தார். ஆனால், தேவனால் கொடுக்கப்பட்ட ஞானமாக இருந்தாலும் கூட தேவனுக்கு சேவை செய்ய அது பயன்படாவிட்டால் வாழ்க்கைக்கான அர்த்தத்திற்கு விடை காண முடியாது என்று சாலொமோன் சொல்கிறார். அதாவது, உலகக் கல்வியில் மட்டும் விடை காண முடியாது என்று சாலொமோன் சுருக்கமாக சொல்கிறார். அதிக ஞானத்தினாலே அதிக சலிப்புண்டு அறிவு பெருத்தவன், நோவு பெருத்தவன் ( பிரசங்கி 1 : 18 ). கல்வி வாழ்க்கையின் ஒரு பகுதியே தவிர அதுவே வாழ்க்கையல்ல. வெறும் கல்வி வாழ்க்கையின் அர்த்தத்தை கண்டறிய உதவி செய்யாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

### II சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை செல்வத்தில் தேடினார்

சாலொமோன் ராஜா செல்வச் செழிப்பாக வாழ்ந்தார். அவர் தன் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்கப் பதிமூன்று வருடம் சென்றது. அந்த அரண்மையின் ஆடம்பரத் தோற்றத்தைப் பற்றி I இராஜாக்கள் ஏழாம் அதிகாரத்தில் நாம் வாசிக்க முடியும். இது இன்றைய அம்பானி மற்றும் பில்கேட்ஸின் மாளிகைகளைவிட ஆடம்பரமானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். அது மட்டுமல்ல பூமியின் சகல ராஜாக்களைப் பார்க்கிலும் ராஜாவாகிய சாலொமோன் ஐசுவரியத்திலும், ஞானத்திலும் சிறந்த வனாயிருந்தான் என்று வேதவசனம் சொல்கிறது (II ராஜாக்கள் 10 : 23)

செல்வத்தின் வாயிலாக வாழ்க்கையின் அர்த்தத்தைக் கண்டறிய முற்பட்ட சாலொமோன் சொன்ன வார்த்தைகளைக் கவனியுங்கள்

" பணபிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை " இதுவும் மாயையே. பொருள் பெருகினால் அதை தின்கிறவர்களும் பெருகுகிறார்கள் அதை உடையவர்கள் தங்கள் கண்களினால் அதைக் காண்பதேயன்றி அவர்களுக்குப் பிரயோஜனம் என்ன? (பிரசங்கி 5 : 10, 11)

**III சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தை பெயரிலும், புகழிலும் தேடினார்**

சில மக்கள் இந்த உலகத்தில் வாழும்போது பேரும் புகழும் பெற்றால் மட்டுமே தாங்கள் முழுமையடைவதாகக் கருதுகிறார்கள். அதைவிட மகிழ்ச்சி வேறு எதிலுமில்லை என்று சொல்கிறார்கள்.

அப்படிப் பார்த்தால் சாலொமோன் ராஜா இஸ்ரவேல் தேசத்தை ஆட்சிசெய்த நாட்கள் மிகச் செழிப்பான நாட்கள், அந்நாட்களில் அவர் புகழின் உச்சியில் இருந்தார். அவருடைய பேரும், புகழும் உலகெங்கிலும் பரவியது. அவருடைய இராணுவச் செலவினங்கள் அபரிதமானது. சாலொ மோனிடத்தில் ஆயிரத்து நானூறு இரதங்கள் இருந்தது. பன்னீராயிரம் குதிரை வீரரும் இருந்தார்கள். அங்கே பிரச்சனை என்னவென்றால் அவரோடு போர் செய்ய யாருமில்லை. எல்லா தேசங்களும் அவரை மதித்து அவருக்கு மரியாதை கொடுத்தன. அவரிடம் கப்பம் செலுத் தப்பட்டது ( I ராஜாக்கள் 10 : 22 - 26). சேபாவின் ராணி சாலொமோனின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு அவரை சந்தித்திருக்கிறாள். (I ராஜாக்கள் 10 : 1 - 9).

அவருக்கு கிடைத்த பணத்திலும், புகழிலும் அவர் திருப்பதியடை யவில்லை. அவர் வெறுமையானவராகவே உணர்ந்து வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருந்தார். வாழ்க்கையையே வெறுத்தவராய் அவர் சொல்லும் வார்த்தைகளைக் கவனியுங்கள். " ஆகையால் இந்த ஜீவனை வெறுத்தேன், சூரியனுக்குக் கீழே நான் பட்டப்பிரயாசத்தை யெல்லாம் வெறுத்தேன். இதுவும் மாயையே என்று சொல்கிறார் (பிரசங்கி 2 : 15 - 23)

கடைசியாக, சாலொமோன் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவதில் விடை கண்டுவிட்டார். அந்த விடையை அவருடைய வார்த் தைகளாலேயே கேட்போம் " காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே " ( பிரசங்கி 12 : 13 ). எனவே, வாலிபச் செல்வங்களே, நாம் இவ்வுலகில் வாழ்வதற்கான நோக்கமே தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கொள்வதற்காகத் தான் என்பதை புரிந்து கொண்டோம் அல்லவா, அப்படிச் செய்யும்போது நம் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருக்கும்.

சிறுவர் பகுதி

# 5 அப்பம், 2 மீன்

Bro. ஏபில் நாயகம்



எனக்குப் பிரியமான சிறு குழந்தைகளே! அனைவரும் நலமாக இருக்கிறீர்கள் என நம்புகிறேன். உங்களில் பலரை ஏலகிரி மலையில் நடந்த VBS ல் சந்தித்ததில் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் கற்றுக்கொண்ட காரியங்கள் உங்களுக்கு பயனளிக்கும் என்று நம்புகிறேன். இன்னும் இரண்டு வாரங்களில் கோடை விடுமுறை முடிகிறதே என்ற கவலையில் இருக்கிறீர்களா? அல்லது புதிய கல்வி ஆண்டை எதிர்நோக்கி சந்தோஷமாக இருக்கிறீர்களா? உங்களில் பலர் சந்தோஷமாகத்தான் இருப்பீர்கள் என நினைக்கிறேன். சரி, உங்களுடைய நேரத்தை அதிகம் வீணடிக்காமல், பாடத்திற்கு உங்களை அழைத்துச் செல்கிறேன்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்த போது அநேக காரியங்களை ஜனங்களுக்குப் போதித்தார். அவருடைய பேச்சை கேட்டு திரளான ஜனக்கூட்டம் அவருக்கு பின் சென்றது. அவர்கள் புரிந்து கொள்ளும்படியாக அநேக உவமைகளை சொன்னதோடு பார்த்து விசுவாசிக்க வேண்டும் என்று அநேக அற்புதங்களையும் செய்தார். அப்படியாக அவருக்குப்பின் வந்த ஜனங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்தார். உதாரணமாக, ஒரு சமயத்தில் தனக்குப் பின் வந்த ஜனங்களின் சோர்வை கண்டு, அவர்கள் பசியாற அவர்களுக்கு உணவளித்தார்.

மத் 14 : 13 – 21; மாற் 6 : 30 – 44; லூக் 9 : 10 – 17; யோ 6 : 1 – 14; ஆகிய நற்செய்திப் புத்தகங்களில் அந்த சம்பவத்தை நாம் வாசிக்க முடியும். இதிலிருந்து நாம் இரண்டு காரியங்களை கற்றுக்கொள்ளப் போகிறோம்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, ஜனங்களுக்குப் போதனைகளை செய்தது மட்டும் அல்லாமல், அவர்கள் மீது பரிவாகவும் இருந்தார். தனக்கு பின் வந்த ஜனங்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மேல் மனதுருகினார்.

1. அவர்களுடைய தேவைகளை பூர்த்திசெய்தால் தன்னால் ஜனங்களுக்கு உதவ முடியும் என்று தெரிந்து. பரிவாக இருந்து உதவினார்.

மற்றவர்களுக்கு நன்மை செய்யும் இந்த குணம் நமக்கு இருக்கிறதா குழந்தைகளே? மற்றவர்கள் மீது பரிவாக இருப்பதும், உதவுவதும் நம்மை தேவனுடைய கண்களில் நல்ல பிள்ளைகளாக இருக்க உதவும். நமக்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தரும்.

2. ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் தன் கைகளில் வாங்கிக் கொண்டு என்ன செய்தார் தெரியுமா? ஆம், வானத்தை அண்ணாந்து பார்த்து உணவை ஆசீர்வதித்தார். தன்னிடம் இருந்த உணவிற்காக தேவனிடம் நன்றி செலுத்தி பின்னர் அதை ஜனங்களுக்கு கொடுத்தார். நம்மில் எத்தனைபேர் உணவு சாப்பிடும் முன் உணவுக்காக நன்றி சொல்லி ஜெபிக்கிறோம்? இயேசு கிறிஸ்து அதை செய்திருக்கிறார். குழந்தைகளே! இந்த பழக்கத்தை நாம் நம் வாழ்வில் கைக்கொள்ள வேண்டும்.

இந்த இரண்டு பாடங்களையும் இச்சிறு பிராயத்தில் நாம் கற்றுக்கொண்டு தேவனுக்கு உகந்த பிள்ளைகளாக இருப்போம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

---

## உக்கிராணத்துவ விதிகள்

- நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள் ( கலாத்தியர் 6 : 7).
- கொடுக்கப்படும் ஒன்றைவிட அதைக் கொடுக்கிறவரின் மனநிலை முக்கியமானது ( I கொரிந்தியர் 9 : 7).
- கொடுப்பதற்கான சரியான நேரமும் வேளையும் இப்பொழுதுதான் (II கொரி 9 : 5).
- முதலில் நம்மை நாமே கர்த்தருக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும் (II கொரி 8 : 5).
- இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள் ( மத்தேயு 10 :8).

வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# கடுகு விதையும் கிறிஸ்துவின் சபையும்

Bro. K. பாஸ்கர்

**அ**ன்பான வாசகர்களுக்கு

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல. உலகில் அநேக சபைகள் தோன்றுகிறது. கொஞ்ச காலத்தில் அந்த சபைகள் எல்லாம் மறைந்து விடுகின்றன. சில நாமகரண சபைகள், போதகர்களுக்கு மட்டும் அடைக்கலமாக இருப்பதைக் காணலாம். ஆனால், ஆண்டவர் இயேசு பரலோக ராஜ்யமான கிறிஸ்துவின் சபையைக் குறித்து அநேக உவமைகளாகப் போதித்தார். அவைகளில் இன்று கடுகு விதையும் கிறிஸ்துவின் சபையும் என்பது. இது குறித்துப் பார்ப்போம்!

I **உவமை** (மத் 13 : 31, 32)

வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். பரலோக ராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான். அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது சகல பூண்டுகளிலும் பெரிதாகி ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.

II **கடுகு விதை**

கடுகு மிகவும் சிறியது என்று நாம் அறிவோம். ஆனால், அதின் விதை அதை விட மிகவும் சிறியது என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த விதை சகல விதைகளிலும் மிகவும் சிறியது என்றார். கடுகு சிருத்தாலும் அதின் காரம் குறையாது என்பது போல கடுகு விதை சிறியதாக இருந்தாலும் அதின் வளர்ச்சி பயங்கரமாக இருக்கும். சகல புல் பூண்டு விதையைக் காட்டிலும் அதிக உயரமாக வளரக் கூடியது. அதைத்தான் ஆண்டவர் நமது விசுவாசம் வளர்ந்திருக்க வேண்டும் என்று போதித்தார். (மத் 17 : 20).

கடுகுச் செடி மட்டும் பாலஸ்தீனா வறண்ட சீதோஷண நிலையில் நன்கு வளரக் கூடியது. கடலுக் கருகாமையில் வளர்ந்திருக்கும் ஒரு மரம் போல நன்கு வளரும். அதன் கிளைகள் ஆகாயத்தில் பறவைகள் வந்து கூடு கட்டியிருக்கும் பறவைகளுக்கு அடைக்கலமாக இருக்கும். அது போல கிறிஸ்துவின் ராஜ்யமும் இருக்கும். பழைய ஏற்பாட்டிலும் ராஜ்யங்களை

ஒரு மரத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. உதாரணமாக தேவன் கேதுரு மரத்தின் நுனிக் கிளைகளில் ஒன்றை எடுத்து அதை உயர்ந்த மலையின் மேல் நடுவார். அது கொப்புகளை விட்டு கனி தந்து மகிமையான கேது ருவாகும். அதின் கீழே சகல வித பட்சி ஜாதிகனும் தங்கி அதின் கிளை களைக் நிழல்களாலே தாபரிக்கும். (எசே 17 : 22 – 24) ஆண்டவர் இயேசு வும் பரலோக ராஜ்யத்தை கடுகு விதைக்கு ஒப்பிட்டுப் போதிக்கிறார். அது போல ஆண்டவர் இயேசு 12. அப்போஸ்தலர்களைக் கொண்டு ஊழியத் தை துவங்கினார். கடுகு விதை எப்படி வளருகிறதோ அதுபோல முதல் நூற்றாண்டின் துவக்கத்தில் மூவாயிரம் பேர் இரட்சிக்கப் பட்டார்கள் (அப் 2 : 47) அதன் பின்பு ஐயாயிரம் பேர்களாக இருந்தனர் (அப் 4 : 4) அதன் பின்பு எண்ணில் அடங்கா பேர்கள் அதாவது திரான புருஷர்களும் ஸ்திரீ களும் இந்த இரட்சிப்பை பெற்றுக் கொண்டு அதின் நிழலில் வந்தடைந் தனர். அதன் பின்பு உலக முழுவதும் கிறிஸ்துவின் சபை பரவி அநேகர் அதின் நிழலில் வந்திருக்கின்றனர். கடுகு விதை எப்படி வளருகிறதோ பரலோக ராஜ்யமாக கிறிஸ்துவின் சபையும் வளருகிறதாயிருக்கிறது.

### III **பரலோக ராஜ்யம் என்றால் என்ன?**

பரலோக ராஜ்யமும் தேவனுடைய ராஜ்யமும் ஒன்று, இதை ஆண்டவர் இயேசு தமது உபதேசத்தில் குறிப்பிடுகின்றார். அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதன்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும், ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமாவது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் ( மத் 19 : 23, 24 ) தேவனுடைய ராஜ்யம் என்பது கிறிஸ்துவின் ராஜ்யமாகும். ( எபே 5 : 5) கிறிஸ்துவின் ராஜ்யம் கிறிஸ்துவின் சபையாகும். (கொலோ 1 : 13, ரோமர் 16 : 16) அந்த கிறிஸ்துவின் சபை இந்த உலக முழுவதும் பரவி இருக்கிறது. அதில் நாம் பிரவேசித்து அதின் நிழலில் இருக்க வேண்டும். இதில் பிரவேசிக்க தேவனுடைய வசனத்தைக் கேள்விப்பட வேண்டும். அதை விசுவாசிக்க வேண்டும். மனந்திரும்ப வேண்டும், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று வாயினாலே அறிக்கை செய்ய வேண்டும். ஞானஸ்நானம் பெற வேண்டும். அப்பொழுதுதான் பரலோக ராஜ்யமாகிய கிறிஸ்துவின் சபையில் பிரவேசிக்க முடியும். அதின் கிளைகளில் சுகமாக வந்தடைவோம். மரணபரியந்தம் வரை நாம் அங்கிருந்தால் தேவன் ஜீவ கிரீடத்தைத் தருவார் ( வெளி 2 : 10 ). அன்பான வாசகரே, இன்று கடுகு விதையைப் போல இருக்கும் கிறிஸ்துவின் சபையில நாம் பிரவேசிக்க நாம் முயற்சிகளை எடுப்போமாக! ●

# யெரொபெயாமின் பாவம்

Bro. G.F. ரேன்ஸ்

ஒன்றுபட்ட ராஜ்யம் பிரிந்த பின் இஸ்ரவேலின் (10 கோத்திரம் மீது) முதல் அரசனாய் இருந்தான். யெரொபெயாம்.

யெரொபெயாம் " தன் மனதிலே சிந்தித்து, யோசனைபண்ணி ". தேவன் ஏற்படுத்தின ஆராதனையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஆராதனை ஒழுங்கை நியமித்து அதைப் பத்து கோத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளும்படி செய்தான். (1. இராஜ12 : 25 - 33) இப்படி எண்ணி செயல்பட்டதால், யெரொபெயாம் " இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப் பண்ணியவன் " என்று குறிப்பிடப்படுகிறான். (2 இராஜ 23 : 15).

நம் சொந்த எண்ணங்களின்படியான அல்லது மனித கற்பனையின் படியான, (தேவன் கட்டளையிடாத) ஆராதனை தேவனுடைய பார்வைக்கு அருவருப்பாகவே இருக்கிறது. யெரொபெயாம் ஆரம்பித்துச் செய்ததுபோல், இன்றும் பிரிவுசபையாரின் ஆராதனை முறைமையில் மனித கற்ப னைகள் அடங்கியிருக்கிறது. உதாரணமாக, இசைக் கருவிகள் பயன்படுத்து வது, தூபம் காட்டுவது, புனித தண்ணீரை பயன்படுத்துவது. இந்தப் புதிய கண்டுபிடித்தலில் ஒன்றுக்கும் புதிய ஏற்பாட்டிலே ஆதாரமில்லை. ஆம் ஒன்றுக்காகிலுமில்லை!

தேவனுடைய புத்தகம் மிகத் தெளிவாய் வாய் பாட்டை (பாடல்) மட்டும் தான் கிறிஸ்தவ ஆராதனைகளில் பயன்படுத்தும்படி தேவன் கட்டளை யிட்டதாகக் கூறுகிறது. அப்போஸ்தலனான பவுல் கூறுகையில் " துன்மார்க் கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு,உங்கள் இருதயத்தில் கர்த் தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி (எபே 5 : 18, 19). மேலும், அவர் அதைப் பற்றி கொலோசே சபைக்கு எழுதுகையில் :- கிறிஸ்துவின் வசனம் உங்க ளுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக: சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு உங்கள் இருதயத் திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி (கொலோ 3 : 16)

மேலும் வேதாகமம் கூறுவதாவது :

" நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின்

கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம், அதில் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம் (உபா 4 : 2).

தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்: தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார். நீ பொய்யானவாய் (நீதி 30 : 5,6).

தேவன் ஆவியாயிருக்கிறார். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். (யோவா 4 : 24)

வார்த்தையினாலாவது கிரியையினாலாவது. நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து. அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் (கொலோ 3 : 17).

கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன் (2 யோவான் 9)

யெரொபெயாமின் துணிகரமான பாவம். அவன் வாழ்ந்து, செயல்பட்ட நாட்களைவிட இப்பொழுது மிகவும் பரந்து விரிந்து காணப்படுகிறது.

சங்கீதக்காரனாகிய தாவீது கூறுகையில் :

" கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது மாயிருக்கிறது: கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறது மாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத்தைச் சந்தோ ஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும்பொன் னிலும், விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளி தேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும் துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டுகொள்ள ஒட்டா திரும். அப்பொழுது நான் உத்தமனாகி, பெரும்பாதகத்துக்கு நீங்கலா யிருப்பேன் ( சங் 19 : 7 - 13 ) ஆகவே, நாமும் யெரொபெயாமைப்போல நம் சுயபுத்தியினால் தேவனுடைய காரியங்களை பற்றி முடிவெடுக்காமல், வேத வசனம் என்ன கூறுகிறதோ அதையே செய்வோமாக!

# மீண்டும் ஞானஸ்நானம், இது ஒரு பாவமா?

Sis. B.B. சோட்

அடுத்தடுத்து ஒவ்வொரு ஞாயிறுதோறும் ஆராதனைக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. ஞாயிறு மாலையில் வேதாகமப் பாட வகுப்புக்காகவும், சில ஆலோசனைகள் செய்யும்படியாகவும் கூடிவர தீர்மானிக்கப்பட்டது.

தங்கள் அலுவலகத்தில் மதிய உணவு இடைவேளையில் ஆண்ட்ரூவும், ஜானும் ஒன்றாக சேர்ந்து படிக்க ஆரம்பித்தார்கள். அத்தோடு மற்றவர்களையும் தங்களோடு அடிக்கடி சேர்த்துக் கொண்டார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் ஜானிடம் வழக்கத்திற்கும் மாறான ஆவல் தெரிந்தது.

" ஆண்ட்ரூ நாம் படித்ததை ஒத்துக் கொள்கிறேன் " ஆனால், செய்வதற்கு எது சரியான காரியம் என்று எனக்கு விளங்கவில்லை. நான் ஏற்கனவே ஞானஸ்நானம் எடுத்துள்ளேன். நான் அதுதான் சரியானதென்று நம்பியிருந்தேன். ஆனால், நீ எபேசியர் 4 : 5 – ல் உள்ள ஒரே தேவன். ஒரே நம்பிக்கை, ஒரே ஞானஸ்நானம் இவைகளைப் பற்றிக் கூறினபோது நான் முற்றிலுமாகக் குழம்பிப்போனேன். நான் மீண்டும் ஞானஸ்நானம் எடுத்தால் அது தவறாக ஆகிவிடாதா?

அந்த ஞானஸ்நானத்தின் நோக்கம் என்னவாக இருந்தது ஜான்? ஆண்ட்ரூ கேட்டான்.

அந்தப் போதகர் என்ன கூறினார் என்று உண்மையாகவே எனக்கு தெரியாது. அவர் ஒரு பிரிவினை சபையின் போதகராக இருந்தபடியால், அவர்களுடைய கொள்கையின்படி தான் போதித்திருப்பார். அந்தப் போதனையைப் பற்றிய ஒரு தெளிவும் எனக்கு இல்லை. ஏதோ சில வாக்குறுதிகளைச் செய்யச் சொன்னார்கள். பிறகு நாங்கள் எல்லோரும் ஞானஸ்நானத்திற்காக ஜெபித்தோம் என்பது எனக்கு நினைவிலிருக்கிறது. என்னுடைய பாவங்கள் எல்லாம் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறது என்று சொன்னார்களா என்று கூட எனக்குத் தெரியாது. அந்த நேரத்தில் இருந்து இரட்சிக்கப்பட்ட மனிதன் என்று நானே நினைத்துக் கொண்டேன் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

வசனத்தில், நாம் குழுவாகச் சேர்ந்து பார்த்தபடி, யோவான் ஸ்நானகன், இயேசு கிறிஸ்து பிறகு அப்போஸ்தலர்கள் போன்றவர்கள் தொடர்ந்து ராஜ்யம் சமீபமாய் இருக்கிறதென்று போதித்தார்கள். அவரது சபை – அப் : 2ம் அதிகாரத்தில் ஆரம்பமான பிறகு மக்கள் உலகத்தில் இருந்து பிரிந்து வந்து அந்த சபையில், அதாவது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்த மக்களோடு சேர்ந்து கொண்டார்கள். பிலிப்பு சமாரியாவுக்குச் சென்றபோது (அப் : 8ம் அதிகாரம் ) அவன் இயேசுவைப் பற்றியும் ராஜ்ஜியத்தைப் பற்றியும் பிரசங்கித்தான்.

ஒருவன் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படாமலும், அவரில் விசுவாசம் வைக்காமலும் அவரை மாத்திரம் கர்த்தர் என்று தெரிந்து கொள்ளாமலும் ஞானஸ்நானம் என்ற முறைக்காக ஏதாவது செய்திருந்தாலும் தேவன் ஒருவனுடைய பாவங்களை மன்னிப்பார் என்பதை உன்னால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? என்று ஆண்ட்ரூ கேட்டான்.

" கட்டாயம் முடியாது! ஒரு மனிதன் கிறிஸ்துவை விசுவாசிக்காமல் எடுக்கும் ஞானஸ்நானம் உண்மையான ஞானஸ்நானம் ஆகாது " ஜான் சீக்கிரமாக பதிலுரைத்தான்.

சபை என்பது ஒரு குறிப்பிட்ட மக்களின் கூட்டமும், வாழ்க்கை முறையில் தங்களைச் சுற்றிலும் உள்ள உலகத்தில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட மக்களுமாகும். இது தனக்குத்தானே ஒரு ராஜ்ஜியமாகும்.

" நீ ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுகிறிஸ்துவை இரட்சகர் என்று விசுவாசித்தாயா? "

" இருக்கலாம் " ஜான் சிரித்தான்.

" இரண்டாம் கேள்வி " ஆண்ட்ரூ தொடர்ந்தான். பிலிப்பு சமாரியா பட்டணத்தில் ராஜ்ஜியத்தைப் பிரசங்கித்ததுபோல் நீ தேவனுடைய சபையைப்பற்றி ஞானஸ்நானம் எடுக்கும்போது கேள்விப்பட்டாயா? எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்றாயா? யாராவது ஒருவர் I கொரி 12 : 13 ம் வசனத்தைக் காட்டினார்களா? " ......... எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம் ....... "

" இல்லை " ஜான் பதிலுரைத்தான். அந்தக் காரியங்களைப் பற்றியெல்லாம் அல்லது சபையைப் பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. இவைகளைப் பற்றி கடந்த சில வாரங்களில் உன்னோடு படிக்கும்போது தான் கேள்விப்பட்டேன்.

“ இல்லை ” அந்தக் காரியங்கள் எது பற்றியும் அல்லது சபையைப் பற்றியும் எனக்கு முன்பு தெரிந்திருக்கவில்லையென ஜான் பதிலுரைத் தான். உன்னோடு சேர்ந்து படிப்பதால் கடந்த சில வாரங்களாகத்தான் இவை பற்றி கேள்விப்படுகிறேன். நான் இவை பற்றிக் கேள்விப்படவில்லை யென்றாலும் தேவன் என்னை சபையில் சேர்த்திருக்கலாம்.

“ ஆனால், அவன் உலகத்திலிருந்து உன்னை வெளிக்கொணரு மாறும், அவருடைய சபையில் உன்னைச் சேர்க்கும்படியாகவும், உனக் காக அவர் ஒன்றைத் தெரிந்திருக்கலாம். அப்படித்தானே? ” என்றான்.

“ ஆம் ” எனக்குத் தெரியாததால் நான் அறிந்திருக்க முடியது என ஒத்துக்கொண்டான்.

“ ஆனால், அவர் உன்னை அப்பொழுது அவருடைய விருப்பத்தின்படி சேர்த்துள்ளபடியாலும், இப்பொழுதுதான் நீ சபையைப் பற்றித் தெரிந்து கொள்வதாலும் நான் எந்த நிலையில் ( அல்லது ) எந்த சபையில் பிறந்தேனோ அப்படியே மரிக்கிறேன். அதுவே போதும் அந்தக் குறுகின சபையில் அங்கமாக இருக்க விரும்பவில்லையென்று “ சொன்னாய்! ”

“ தான் அங்கமாக இருக்கும்படி தெரிந்து கொள்ளப்படாத ஒன்றில் ஒருவனைக் கொண்டுபோய்ச் சேர்ப்பது தேவன் செய்யக்கூடாத காரியம் என்று உனக்குத் தெரிகிறதா, ஜான்?

“ ஆம், எனக்கு அது நன்றாக விளங்குகிறது ” என்று ஜான் ஒத்துக்கொண்டான்.

இங்கே, அப். 19ம் அதிகாரத்தில் ஒரு கூட்டமக்களைப் பற்றிப் படிக்கலாம். அவர்கள் கிறிஸ்துவைப் பற்றிக் கேள்விப்படாமலே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். ஆகையால், ஞானஸ்நானம் என்ற பெயரில் அவர்கள் செய்யும் காரியத்தை தேவன் அங்கீகரிக்கவில்லை.

“ ஆம், இங்கு வசனம் 5 – ல் அவர்கள் அதைக் கேட்டபொழுது கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள் ” இங்கே “ மீண்டும் ” என்று கூட சொல்லவில்லை!

ஒரு மனிதன் தேவனுக்கு கீழ்ப்படிவது வசனத்திற்கு விரோதமாக இருக்குமானால் அவன் அதை சரிசெய்து கொள்ளவேண்டும். நிச்சயமாக அங்கே ஒரே ஒரு ஞானஸ்நானம்தான் – தேவனுடைய சபைக்குள் ஒரே ஒரு முறைதான் பிறப்பு! அநேகமாக மக்கள் தவறாக போதிக்கப்படுகிறார்கள்

அவர் இரட்சிக்கப்படாமலிருந்தாலும் இரட்சிக்கப்பட்டாயிற்று என்று நம்புகிறார்கள் ஜான். இப்பொழுது நீ புரிந்திருப்பாய் நாம் எப்படி இரட்சிக்கப்படுகிறோம் என்று ஞானஸ்நானம் என்பது புதியதாக பிறப்பது. அது நம்மை கிறிஸ்துவுக்குள், அவரது சபைக்குள் சேர்க்கிறது. நீ உண்மையாகவே வசனத்தின்படி ஞானஸ்நானம் எடுக்க முடியும் " என்று ஆண்ட்ரூ வலியுறுத்துகிறான்.

" நான் அதை செய்யச் விரும்புகிறேன் " ஜான் பதிலுரைத்தான். " நீ எனக்கு ஞானஸ்நானம் கொடுக்க முடியுமா, ஆண்ட்ரூ? " ●

---

# நாளும், நடப்பும்

- ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பதிலாக 15 ஆண்டு தொலை நோக்குத் திட்டம்.
- தேர்தல் கருத்துக் கணிப்புகளின் உண்மைத் தன்மை தொடர்ந்து கேள்விக்குள்ளாகி வருகிறது.
- மருத்துவப் படிப்புக்கான பொது நுழைவுத் தேர்வு முறை தமிழக அரசியல் கட்சிகளுக்குச் சவாலாகி வருகிறது.
- புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து - அரசியல் கட்சிகள் வாக்குறுதி.
- ஊழல் குற்றைச்சாட்டையடுத்து பிரேசிலில் புதிய அமைச்சரவை.
- 1900 கங்காருகளைக் கொல்ல ஆஸ்திரேலியா அரசு முடிவு.

# இரண்டு உடன்படிக்கைகள்

**முன்னுரை**

I **நோக்கம் :** இரண்டு வேறுபட்ட காலகட்டங்களில், தேவன் தன்னுடைய மக்களோடு ஏற்படுத்திக் கொண்ட இரண்டு ஏற்பாடுகளுக்கான உறவு பற்றிப் படிப்பது, பழைய ஏற்பாட்டின் நோக்கம் பற்றியும், அது முடிந்து போவது பற்றியும் தெரிந்து கொள்வது. பிறகு, புதிய ஏற்பாடு நிலை நிறுத்தப்படுதலைக் கவனிப்பது.

II **விளக்கம் :** **உடன்படிக்கை** : இரண்டு அல்லது அதற்கு அதிகமானவர்களால் செய்து கொள்ளப்படும் ஓர் ஒப்பந்தம். இது ஒன்றைச் செய்யலாம் என்றும் அல்லது செய்யக்கூடாது என்றும் சம்பந்தப்பட்டவர்களைக் கட்டுப் படுத்தும். உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ளபடி செய்தால், நன்மை வாக்களிக்கப்பட்டிருக்கும்.

III **உண்மைகள் :** **பழைய ஏற்பாடு**: தேவனுக்கும். ஒரு தேசத்துக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஓர் ஒப்பந்தம்.

**புதிய ஏற்பாடு**: தேவனுக்கும். எல்லா மனிதருக்கும் இடையே செய்யப்பட்டிருக்கிற ஓர் ஒப்பந்தம்.

1. ஓர் ஒப்பந்தம் நிபந்தனையுடனிருக்கலாம் : தேவனுக்கும் - இஸ்ரவேலருக்கும் (யாத் 19 : 5 - 18)
2. ஓர் ஒப்பந்தம் நிபந்தனையற்றதாகவும் இருக்கலாம் : தேவனுக்கும், ஆபிரகாமுக்கும் (ஆதி 19 : 5 - 18)

**விவாதம்**

I **பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை**

A. தேவனுக்கும் - இஸ்ரவேலருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது ( யாத் 19 :1 - 5)

B. இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேசச் சட்டம் (யாத் 20 : 1 - 2, 31 : 12 - 17, 34 : 27 - 28)

C. கிறிஸ்துவாகிய " சந்ததி " வருமளவும், குறிப்பிட்ட காலம் வரை நீடித்திருக்கும்படியாகக் கொடுக்கப்பட்டது. (கலா 3 : 16, 3 : 19)

D. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால், " நியாயப் பிரமாணம் " என்று அழைக்கப்பட்டு பேசப்பட்டுள்ளது.

1. ரோம 1 : 17 யும் ஆபகூக் 2 : 4 – யும் ஒப்பிடுக.

2. மத் 22 : 35 – 39 யும். உபா 6 : 5. லேவி 19 : 18 ஒப்பிடவும்

3. யோவான் 10 : 34 – ல் இயேசுவும் " வேதம் " என்று குறிப்பிட்டுள்ளார்

4. அப். பவுல் I கொரி 14 : 21 ல் ஏசாயா 28 : 11 – 12 வசனங்களை மேற்கோள் காட்டுகிறார்.

II **பத்து கட்டளைகள்**

A. சனிக்கிழமைகளில் கூடிவந்து இன்றைக்கு ஓய்வு நாளைக் கடைபிடிக்கவேண்டுமென்று பொய்யாய் சொல்கிறவர்கள் பற்றி கவனிக்கப்பட வேண்டியவை

1. அவர்கள் நியாயப்பிரமாணத்தை இரண்டாகப் பிரிக்கிறார்கள். a) ஒழுக்க ரீதியானவை b) சடங்காச்சார ரீதியானவை

2. ஒழுக்க ரீதியானவை தேவனால் கொடுக்கப்பட்டவை. அவை நீக்கப்படவில்லையென்று சொல்கிறார்கள்.

3. சடங்காச்சாரமானவை மோசேயினால் கொடுக்கப்பட்டவையென்றும், அவை எடுத்துப் போடப்பட்டதென்றும் சொல்கிறார்கள்.

4. இவைகள் தவறான எண்ணங்கள்

B. இப்படிப்பட்ட நம்பிக்கைகளில் உள்ள பிரச்சினையென்னவென்றால், வேதாகம எழுத்தாளர்கள் இப்படிப் பிரிவினை ஏற்படுத்தவில்லை.

1. தேவனுடைய பிரமாணங்களை மோசே பேசினான் (நெகே 10 : 29, 8 : 14)

2. " மோசேயின் பிரமாணங்களை " தேவன் கொடுத்தார் ( நெகே 8 : 1, எஸ்றா 7 : 6)

3. தேவனுடைய பிரமாணம், மோசேயின் பிரமாணம் ஆகிய பிரமாணங்கள் எல்லாம் ஒரே இடத்திலிருந்து தான் வந்தது. அவைகள், ஒன்றுக்கு மாற்றாக மற்றொன்று இருக்க முடியும் (நெகே 8 : 1 – 8)

C. தேவன் " பத்து கட்டளைகளை உடன்படிக்கை " என்று கூறுகிறார். யாத் 34 : 27 – 28 உபா 4 : 13, 9 : 9 – 11. I ராஜா 8 : 9,21. ஆகையால் உடன்படிகை நிறைவேற்றப்பட்டு எடுத்துப்போடப்பட்டிருக்குமானால் பத்துக்கட்டளைகளும் முடிந்து போய்விட்டன.

D. **உதாரணம்** : நமது இந்திய தேசம் பிரிட்டிஷ் காலனியாக இருந்தபோது. இங்கிலாந்து நாட்டிற்கும் அதன் சட்டங்களுக்கும் கீழாக இருந்தது. ஆனால், சுதந்திரம் அடைந்த பிறகு. சட்டங்கள் எழுதப்பட்டபின். நாம் இங்கிலாந்து நாட்டுச் சட்டங்களுக்கு கீழானவர்கள் அல்ல. நமது தேச சட்டங்களில் பெரும்பாலானவை இங்கிலாந்து தேச சட்டங்களில் உள்ளவையா இருந்தா லும்கூட, இதுதான் உண்மை.

III **பழைய உடன்படிக்கை முடிந்து போதல்**

A. **எரேமியா 31 : 31 - 34** புது உடன்படிக்கை வருவதை முன்னுரைக்கிறது " இதற்குள்ளாக இருக்கிற எல்லோரும் அவரை அறிவார்கள் " என்றும் " இனி பாவங்கள் நினைக்கப்படுவதில்லையென்றும் " கூறப்பட்டுள் ளதை அறிகிறோம்.

B. எபி 8 : 6 – 13 வசனப்பகுதி எரேமியா 31 : 31 – 34 – ன் நிறைவேறு தலாகவும், கிறிஸ்துவின் போதனைகள் " புதிதாக " இருக்கும் என்பதையும் காட்டுகிறது.

C. ஆனால், முதலாவது உடன்படிக்கையாகிய நியாயப் பிரமாணத்தை குறிப்பாக யார் எடுத்துப்போட்டது?

1. மத் 5 : 17 – ல் முதலாவது உடன்படிக்கையை தான் நிறைவேற்றி விட்டதாக கிறிஸ்து கூறியுள்ளார் (யோவா 19 : 28)

2. எபே 2 : 14 – 16 ல் இயேசு மரித்தபோது இதைச் செய்ததாக பவுல் கூறியுள்ளார்.

3. எபி 7 : 12, 9 : 15 – 17 ன் படி புதியதாகிய, இரண்டாம் உடன்படிக்கை அதை உண்டுபண்ணினவர் மரணமடையுமட்டும் நடைமுறைக்கு வர முடியாது

4. இரண்டு உடன்படிக்கைகளுக்கு கீழாக நாம் வாழ முடியாது. எபி 10 : 9 வாசிக்கவும்.

5. கற்பலகைகளில் எழுதப்பட்ட பிரமாணம் " ஒழிந்து போனது " II கொரி 3 : 6 – 17.

IV **புதிய உடன்படிக்கை - கிறிஸ்துவின் சுவிசேஷம்**

A. இயேசுவுக்கு தேவனால் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளது ( மத்17 : 5)

B. தனக்கு எல்லா அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளதாக இயேசு உறுதி செய்கிறார் (மத் 28 : 18, யோவா 17 : 2)

C. இயேசுவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாக பவுல் போதித்தார் ( I கொரி 15 : 24 - 28 எபே 1 : 20, 22 கொலோ 1 : 18)

D. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக இயேசு இருந்தார். (கலா 3 : 6 - 29). அதன் கீழாக, கீழ்ப்படிகிற யாவரும் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறார்கள் ( II கொரி 5 : 17).

V **புதிய உடன்படிக்கையின் நோக்கம் – கிறிஸ்துவின் சுவிசேஷம்**

A. மத் 28 : 19 – " சகல தேசங்களுக்கும் " உபதேசம் பண்ணுங்கள்

B. மாற் 16 : 15 – " நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்

C. லூக் 24 : 46 - 49 " ........ மனந்திரும்புதலும், பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் - பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.

**முடிவுரை**

1. புதிய பிரமாணத்தில் (பழைய பிரமாணத்திலல்ல) பாவி தேவனண்டை வர முடியும் (எப்படி? கிறிஸ்துவின் இரத்தம்)

2. கலா 5 : 4 " நியாயப்பிரமாணத்தினால் நீதிமானாக விரும்புகிறவன் கிருபையினின்று விழுகிறான் "

3. பழைய உடன்படிக்கையில் அல்ல. புதியதில் தான் பாவமன்னிப்புக்கான நிபந்தனைகளைக் காண முடியும்

4. புதியதில்தான் ஐக்கியத்திற்கான நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ளது. (I யோவா 1 : 4)

5. புதிய ஏற்பாட்டில் தான் நமக்கான தேவனுடைய வாக்குத்தத்தங்களும், எப்படி நித்தியகாலமாக வாழ்வது என்பது பற்றியும் உள்ளது.



முகாமில் வாலிபர்கள்



முகாமில் வாலிபப் பெண்கள்



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2015-2017
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2015-2017

# ருமறை ஆசான்

டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ் மலர் - 29 இதழ் - 5 மே 2016

Annual Subscription
Rs.100/-

தனிப்பிரதி
ரூ.10/-

## வேதாகம முகாமில் சில காட்சிகள்

முகாமில் ஆண்கள்



முகாமில் பெண்கள்



வாலிப பெண்கள் வகுப்பில் சகோ. காஞ்சனா



மாலை நேரக் கூட்டத்தின் போது







முகாமில் சிறுவர்கள்



பெண்கள் வகுப்பில்
சகோ. ஜோதி ராஜையன்



**19 ஆம் வேனிற்கால வேதாகம முகாம் பற்றி...**

* எதிர்வந்த எல்லா சவால்களையும் மேற்கொள்ள எல்லாம் அறிந்த தேவன் பெலன் தந்தார்.
* ஏராளமான உங்கள் ஜெபங்களுக்கு

அறிவுரையிலே..... 3